இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முகாமைத்துவ கற்கைகள் பீடம்

முயற்சியாண்மை மற்றும் சிறுவணிக முகாமைத்துவ உயர்தர சான்றிதழ் கற்கைநெறி
AFU 2406 – முயற்சியாளர்களுக்கான கணக்கீடு மற்றும் நிதியியல்
இறுதிப் பரீட்சை – 2025 / 2026
காலம் – இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி: 17.05.2026 நேரம்: மு. ப 9.30 - மு. ப 11.30

அறிவுறுத்தல்கள்:

- இவ் வினாத்தாள் ஐந்து (05) வினாக்களைக் கொண்டுள்ளது. முதலாம் வினா (01) உட்பட நான்கு (04) வினாக்களுக்கு விடையளிக்கவும். அனைத்து வினாக்களும் சமனான புள்ளிகளைக் கொண்டுள்ளது (ஒவ்வொன்றிற்கும் 25 புள்ளிகள்).
- இவ் வினாத்தாள் நான்கு (04) பக்கங்களைக் கொண்டுள்ளது.
- உங்கள் சுட்டெண்ணை விடைத்தாளில் கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதவும்.
- விடைத்தாள் புத்தகத்தில் அனைத்து செய்கைவழிமுறைகளும் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.
- நிரல்படுத்தப்படாத கணிப்பான்களின் (non-programmable calculator) பயன்பாடு அனுமதிக்கப்படுகிறது.

**வினா 01**

அ) முயற்சியாளர்கள் முறையான நிதி பதிவுகளை (Financial records) பராமரிப்பது ஏன் அவசியம் எனபதற்கான மூன்று காரணங்களை விளக்குக. (05 புள்ளிகள்)

ஆ) 31 மார்ச் 2026 இல் ரவீந்து நிறுவனத்தின் பரீட்சை மீதி (Trial Balance) பின்வருமாறு.

| விபரங்கள் | வரவு (ரூ.'000) | செலவு (ரூ.'000) |
|---|---|---|
| மூலதனம் (01.04.2025) | | 16,600 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (கிரயத்தில்) | | |
| மோட்டார் வாகனங்கள் | 8,000 | |
| அலுவலக உபகரணம் | 12,000 | |
| திரட்டப்பட்ட தேய்மானம் (01.04.2025) | | |
| மோட்டார் வாகனங்கள் | | 2,000 |
| அலுவலக உபகரணம் | | 4,000 |
| வங்கியிலுள்ள காசு | 2,500 | |
| கையிலுள்ள காசு | 4,000 | |
| வியாபாரப்பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் (Trade Receivables & Payables) | 7,500 | 3,200 |
| விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் | 12,500 | 32,000 |
| இருப்பு (01.04.2025) | 6,000 | |
| 10% வங்கிக் கடன் | | 2,500 |
| சம்பளங்கள் | 4,700 | |
| வாடகை | 2,700 | |
| மின்சாரம் | 1,900 | |
| தரகுப்பெறுவனவு (Commission Received) | | 1,500 |
| | **61,800** | **61,800** |

பின்வரும் மேலதிகத்தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன:

1. 31 மார்ச் 2026 அன்றிலுள்ள இறுதி இருப்பு கிரயத்தில் ரூ. 5,500,000 மற்றும் அதன் நிகரத்தக்கப் பெறுமதி (NRV) ரூ.5,000,000.
2. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கான தேய்மானம், பின்வரும் விகிதங்களில் நேர்கோட்டு முறையைப் (Straight-line) பயன்படுத்தி வழங்கப்பட வேண்டும்.
   - மோட்டார் வாகனங்கள்: ஆண்டுக்கு 20%
   - அலுவலக உபகரணம்: ஆண்டுக்கு 10%
3. நிறுவனமானது 01 அக்டோபர் 2025 அன்று வங்கிக்கடனைப் பெற்றது.

4. ஆண்டு இறுதியில், நடப்பு ஆண்டிற்கான ரூ. 100,000 மதிப்பிலான மின்சாரக் கட்டணம் செலுத்தப்படாமல் உள்ளது.
5. 01 ஏப்ரல் 2025 முதல் 18 மாதங்களுக்கான வாடகை செலுத்தப்பட்டுள்ளது.
6. ஆண்டில் பெறப்பட்ட தரகுத்தொகையில் (out of commission received), 60 சதவீதம் மட்டுமே நடப்புக் கணக்கீட்டு காலத்திற்குரியதாகவும் (current accounting period), மீதமுள்ள 40 சதவீதம் அடுத்த கணக்கீட்டு காலத்திற்குரியதாகவும் (next accounting period) உள்ளது.
7. நிறுவனமானது ரூ. 500,000 தொகையை அறவிடமுடியாக்கடனாக (bad debt) தள்ளுபடி செய்ய முடிவு செய்துள்ளது. மேலும், இதற்கு முன்னர் எந்த ஒதுக்கீடும் இல்லாததால், வியாபாரப்பெறுவனவு நிலுவைத் தொகையில் 5% என்ற விகிதத்தில் ஐயக்கடனாக ஏற்பாடு (doubtful debt) செய்ய முடிவு செய்யப்பட்டது.

வேண்டப்படுவது :

1) ரவீந்து நிறுவனத்தின், 31 மார்ச் 2026 அன்று முடிவடைந்த ஆண்டுக்கான வருமான கூற்றினை தயாரிக்குக.
2) ரவீந்து நிறுவனத்தின், 31 மார்ச் 2026 அன்றிலுள்ள நிதிநிலைமைக்கூற்றினைத் தயாரிக்குக.

(20 புள்ளிகள்)

**(25 புள்ளிகள்)**

**வினா 02**

அ) ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் பொருத்தமான முதன்மைப் புத்தகத்தினையும் (Primary book) மற்றும் மூல ஆவணத்தையும் (source document) குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

| | கொடுக்கல் வாங்கல்கள் |
|---|---|
| 1 | கடனிற்கு விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் |
| 2 | விநியோகஸ்தர்களுக்கு திருப்பி அனுப்பப்பட்ட பொருட்கள் |
| 3 | வாடிக்கையாளரால் திருப்பி அனுப்பப்பட்ட பொருட்கள் |
| 4 | காசுக்கு விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் |
| 5 | கடனிற்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் |

ஆ) பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள், 2026 மார்ச் மாதத்திற்கான திரு. பெரேராவின் வணிகம் தொடர்பானவை ஆகும்.

1) 01/03/2026: திரு. பெரேரா ரூ. 500,000 காசையும், ரூ. 800,000 மதிப்புள்ள தளபாடத்தையும் ரூ. 700,000 மதிப்புள்ள அலுவலக உபகரணத்தையும் கொண்டு வணிகத்தினை ஆரம்பித்தார்.
2) 02/03/2026: உரிமையாளர் ரூ. 200,000 ஐ வங்கியில் வைப்பு செய்தார்.
3) 04/03/2026: திரு. சில்வாவிடமிருந்து ரூ. 120,000 மதிப்புள்ள பொருட்கள் கடனுக்கு வாங்கப்பட்டன.
4) 06/03/2026: ரூ. 60,000 மதிப்புள்ள பொருட்கள் காசுக்கு விற்பனை செய்யப்பட்டன.
5) 08/03/2026: திரு. கமலுக்கு ரூ. 90,000 மதிப்புள்ள பொருட்கள் கடனுக்கு விற்பனை செய்யப்பட்டன.
6) 10/03/2026: திரு. கமல் தனது கணக்கை முழுமையாகத் தீர்ப்பதற்காக ரூ. 85,000 செலுத்தினார்.
7) 12/03/2026: வாடகை ரூ. 20,000 காசோலை மூலம் செலுத்தப்பட்டது.
8) 15/03/2026: திரு. சில்வாவுக்கு ரூ. 20,000 மதிப்புள்ள பொருட்கள் திருப்பி அனுப்பப்பட்டது.
9) 18/03/2026: திரு. சில்வாவுக்கு, முழுத்தொகையான ரூ. 95,000 காசோலை மூலம் செலுத்தப்பட்டது.
10) 22/03/2026: உரிமையாளர் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக எடுத்த காசு ரூ. 30,000.

மேலே உள்ள கொடுக்கல் வாங்கல்களை அடிப்படை கணக்கீட்டு சமன்பாட்டில் உள்ளிடுக. (சொத்து = உரிமையாண்மை + பொறுப்பு) (20 புள்ளிகள்)

**(25 புள்ளிகள்)**

**வினா 03**

அ) கணக்கீட்டு எண்ணக்கருக்களைப் (Accounting concepts) பயன்படுத்தி கோடிட்ட இடங்களை நிரப்புக

1) வணிகப் கொடுக்கல் வாங்கல்களை உரிமையாளரிடமிருந்து வேறுபடுத்தி தனியாகப் பதிவு செய்ய வேண்டும் என்ற கருத்தானது........................................................................................ என அழைக்கப்படும்.

2) ஒரு வணிகம் எதிர்காலத்திலும் தொடர்ந்து இயங்கும் என்ற அனுமானம் ................................................................................என அழைக்கப்படுகிறது.

3) ................................................................................என்ற எண்ணக்கருபடி, வருமானமானது காசு பெறப்படும் போது அல்ல மாறாக அது ஈட்டப்படும் போதே பதிவு செய்யப்பட வேண்டும்.

4) சொத்துக்கள் அவற்றின் ஆரம்ப விலையில் (Original cost) பதிவு செய்யப்படுவது ................................................................................ ஆகும்.

5) நியாயமான காரணம் இருந்தாலன்றி, ஒரு கணக்கீட்டு காலத்திலிருந்து மற்றொரு கணக்கீட்டு காலத்திற்கு அதே கணக்கீட்டு முறைகளைப் பயன்படுத்த வேண்டும் என்று கோரும் கோட்பாடு, ....................................................கோட்பாடு என அழைக்கப்படும்.

(05 புள்ளிகள்)

ஆ) பின்வரும் தகவல்கள், ஒரு பொருளை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் ஒரு நிறுவனம் தொடர்பானவை ஆகும்.

ஒரு அலகிற்கான விற்பனை கிரயம் (Selling price) = ரூ. 120

ஒரு அலகிற்கான மாறும் கிரயம் ( Variable Cost) = ரூ. 80

ஆண்டுக்கான நிலையான கிரயம் ( Fixed costs per year) = ரூ. 400,000

எதிர்பார்க்கப்படும் விற்பனை ( Expected sales) 15,000 அலகுகள்

இந்த நிறுவனமானது ஆண்டுக்கு ரூ. 200,000 இலாபத்தை ஈட்ட எதிர்பார்க்கிறது.

வேண்டப்படுவது;

1) அலகிற்கான பங்களிப்பைக் (Contribution per unit) கணிப்பிடுக.
2) சமபாட்டுப்புள்ளியை (BEP) அலகுகளில் கணிப்பிடுக.
3) சமபாட்டுப்புள்ளியை (BEP) விற்பனை கிரயத்தில் (sales value) கணிப்பிடுக.
4) பாதுகாப்பு எல்லை விகிதம் (Margin of safety) அலகுகளிலும் விற்பனை கிரயத்திலும் கணிப்பிடுக.
5) ரூ. 200,000 இலாபத்தை ஈட்ட விற்கப்பட வேண்டிய அலகுகளின் எண்ணிக்கையைக் கணிப்பிடுக.

(20 புள்ளிகள்)

**(25 புள்ளிகள்)**

**வினா 04**

அ) ஒரு நிறுவனத்தில், ஒரு குறிப்பிட்ட மூலப்பொருளுக்கான ஆண்டுத் தேவை 24,000 அலகுகள் ஆகும். மூலப்பொருளின் தேவைகளைக் கருத்தில் கொள்ளும்போது, ஒரு கட்டளைக்கான (cost of placing an order) ரூ. 1,200 மற்றும் ஒரு அலகு இருப்பு வைத்திருப்பதற்கான செலவு (cost of holding one unit) ரூ. 60 ஆகும். ஒரு அலகின் கொள்முதல் விலை (purchase price per unit) ரூ. 500. அந்நிறுவனம் தொடர்ச்சியான சிக்கன கட்டளைத் தொகை ( EOQ) முறையைப் பின்பற்றுகிறது. சிக்கன கட்டளைத் தொகை (EOQ) கணக்கிடுக.

(05 புள்ளிகள்)

ஆ) 31 மார்ச் 2026 அன்று சம்பத் வணிகத்தின் பரீட்சை மீதி ஒத்துப்போகவில்லை, மேலும் கணக்குகளைச் சமன் செய்வதற்காக ரூ. 30,000 வரவு இருப்புடன் ஒரு தொங்கல் கணக்கு (suspense account) உருவாக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, பின்வரும் பிழைகள் கண்டறியப்பட்டன:

1. ரூ. 15,000 மதிப்பிலான விற்பனை கணக்குப் புத்தகங்களிலிருந்து முற்றிலுமாக விடுபட்டிருந்தது.
2. ரூ. 8,000 மதிப்பிலான கொள்வனவானது கொள்வனவு கணக்கில் இரண்டு முறை பதிவு செய்யப்பட்டுள்ளது.
3. கடன்பெறுனரிடமிருந்து பெறப்பட்ட ரூ. 10,000 காசானது, காசுப்புத்தகத்தில் சரியாகப் பதிவு செய்யப்பட்டது, ஆனால் கடன்பெறுனர் கணக்கில் பதிவுசெய்யப்படவில்லை.
4. செலுத்தப்பட்ட வாடகையான ரூ. 6,000, மின்சாரக் கட்டணக் கணக்கில் வரவுப்பக்கத்தில் (Debited) பதிவு செய்யப்பட்டது.
5. ரூ. 7,500 மதிப்புள்ள காசு விற்பனை, காசுப்புத்தகத்தில் ரூ. 5,700 எனத் தவறாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.
6. ரூ. 3,200 தொலைபேசிக் கட்டணம் ரூ. 1,200 குறைவாகக் கணக்கிடப்பட்டது.

7. ஒரு கடன்பெறுனரிடமிருந்து பெறப்பட்ட ரூ. 7,000 மதிப்புள்ள காசோலை, காசுப்புத்தகத்தில் சரியாகப் பதிவு செய்யப்பட்டபோதிலும், கடன்பெறுனரின் கணக்கில் வரவு (Debited) வைக்கப்பட்டது.
8. அனுமதிக்கப்பட்ட ரூ. 2,000 கொடுத்த கழிவு, கடன்பெறுனரின் கணக்கில் மட்டுமே பதியப்பட்டது.
9. ரூ. 5,500 மதிப்புள்ள விற்பனை, விற்பனைக் கணக்கிற்குப் பதிலாகத் தவறுதலாகக் கொள்வனவுக்கணக்கில் செலவு (Credited) வைக்கப்பட்டது.
10. ரூ. 9,000 மதிப்புள்ள காசு விற்பனை, விற்பனைக் கணக்கில் ரூ. 6,000 ஆகப் பதிவு செய்யப்பட்டது.

நீங்கள் செய்ய வேண்டியது;

1. பிழைகளைத் திருத்துவதற்கான நாளேட்டுப் பதிவுகளை எழுதுக.
2. தொங்கல் கணக்கைத் (suspense account) தயாரிக்குக. (20 புள்ளிகள்)

**(25 புள்ளிகள்)**

**வினா 05**

அ) நிமல் வணிகத்தின் காசுப் புத்தகம், 31 மார்ச் 2026 அன்று ரூ. 85,000 செலவு மீதி காட்டியது. அதே திகதியில் வங்கி அறிக்கை வேறுபட்ட மீதியினைக் காட்டியது. வேறுபாட்டிற்கான பின்வரும் காரணங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

- ரூ. 12,000 தொகைக்கு வழங்கப்பட்ட காசோலைகள் இன்னும் பணம் செலுத்துவதற்காகச் சமர்ப்பிக்கப்படவில்லை (not yet presented).
- பெறப்பட்ட ரூ. 8,500 மதிப்புள்ள காசோலைகள் வங்கியில் வைப்பிலிடப்பட்டது, ஆனால் இன்னும் வரவு வைக்கப்படவில்லை (not yet credited by the bank).
- காப்பீட்டுக்கான நிலையான கட்டளை (standing order) ரூ. 3,000, காசுப்புத்தகத்தில் பதிவு செய்யப்படவில்லை.
- ஒரு வாடிக்கையாளர் வைப்புசெய்த ரூ. 6,000 நேரடி வைப்புத்தொகை (direct deposit), வங்கியில் மட்டுமே பதிவு செய்யப்பட்டது.
- ரூ. 1,200 வங்கி கட்டணம், வங்கி அறிக்கையில் மட்டுமே காணப்பட்டது.

1) மார்ச் 31, 2026 இன் படி சீராக்கப்பட்ட காசுப் புத்தகத்தைத் தயாரிக்குக.
2) சீராக்கப்பட்ட காசுப் புத்தக மீதியிலிருந்து தொடங்கி, மார்ச் 31, 2026 இன் படி வங்கி இணக்கக்கூற்றை தயாரிக்குக. (10 புள்ளிகள்)

ஆ) ஒரு நிறுவனம், திட்டம் A மற்றும் திட்டம் B என இரண்டு முதலீட்டுத் திட்டங்களைப் பரிசீலித்து வருகிறது. ஒவ்வொரு திட்டத்திற்கும் ஆரம்ப முதலீடு ரூ. 200,000 தேவைப்படுகிறது. எதிர்பார்க்கப்படும் காசுப்பாய்ச்சல்கள் பின்வருமாறு.

| வருடம் | திட்டம் A (ரூ.) | திட்டம் B (ரூ.) |
|---|---|---|
| 1 | 80,000 | 60,000 |
| 2 | 70,000 | 80,000 |
| 3 | 60,000 | 90,000 |
| 4 | 50,000 | 40,000 |

மூலதனச் செலவு (தள்ளுபடி விகிதம்) [Cost of capital ( discount rate)] 10%.

(அ) திட்டம் A மற்றும் திட்டம் B-க்கான திரும்பச் செலுத்தும் கால முறையினை (payback period) கணக்கிடுக. திரும்பச் செலுத்தும் காலத்தின் அடிப்படையில் எந்தத் திட்டம் மிகவும் பொருத்தமானது எனக் குறிப்பிடுக.

(ஆ) திட்டம் A மற்றும் திட்டம் B-க்கான தேறிய நிகழ்காலப் பெறுமதி முறை (NPV) கணக்கிடுங்கள். தேறிய நிகழ்காலப் பெறுமதியின் அடிப்படையில் எந்தத் திட்டம் மிகவும் பொருத்தமானது எனக் குறிப்பிடுக. (15 புள்ளிகள்)

**(25 புள்ளிகள்)**

**மொத்தம் = 100 புள்ளிகள்**

-பதிப்புரிமையுடையது-